இதுதான் ஆப்ஜெக்ட். இதை வைத்துக்கொண்டு அவர்கள் சர்வே செய்து சில விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த விவரங்கள் உபயோககரமாகத்தான் இருக்கின்றன. அவற்றை அரசாங்கம் கவனித்துக்கொண்டு வருகிறது.

காட்டூர் கொத்தமங்கலம் ஆரம்பப்பள்ளி

*303 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், காட்டூர் கொத்தமங்கலம் இந்து அரசினர் உதவிபெறும் ஆரம்பப் பள்ளியில், ஆரம்பத் தேதியிலிருந்து இதுவரை எத்தனை தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள், ஆண்டுவாரியாக ?

(இ) இல்லை என்றால், காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) அரசாங்க மானியம் பெறும் காட்டூர் கொத்தமங்கலம் இந்துத் தொடக்கப் பள்ளியில் இதுவரை அரிஜன மாணவர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை ;

(இ) இப்பள்ளியில் அரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எத்தகைய மறுப்போ தடையோ இல்லை. எனினும் அரிஜன மாணவர் எவரும் இப்பள்ளியில் சேரத் தமது மனுவை பள்ளி நிர்வாகிக்கு அனுப்பவில்லை. அரிஜன மாணவர் அனைவரும் இக்கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியில் கல்வி பயிலுகின்றனர்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் இதுவரைக்கும் எந்த அரிசன மாணவரும் அந்தப் பள்ளியில் சேருவதற்கு மனுச் செய்துகொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். அந்த ஊரிலுள்ள ஒரு அரிசன போஸ்ட் மாஸ்டருடைய பிள்ளையை அந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்காக எவ்வளவு தகராறு நடந்தது என்பது நேரிடையாகப் பார்த்தவர்களுக்குத் தெரியும். அதை ஏன் மூடி மறைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் மூடி மறைப்பதாகக் கனம் அங்கத்தினர் நினைப்பது முற்றிலும் தவறு. என்னிடம் இருக்கிற தகவலை வைத்துக்கொண்டுதான் நான் சொல்கிறேன். இந்தப் பள்ளி நிர்வாகி அரிசன மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார் என்பதுதான் என்னிடத்தில் இருக்கிற தகவல். இதுவரையில் அரிசன மாணவர் ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதுதான் என்னிடம் உள்ள தகவல். அங்கு இருக்கிற அரிசனப் பிள்ளைகள் மற்றொரு பள்ளியில் படிக்கிறார்கள் என்பதுதான் என்னிடம் உள்ள

தகவல். குறிப்பிட்டு இன்னர் சேருவதற்கு முயற்சித்தார். ஆனல் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்தால், அதற்கு மேல் விசாரித்து விடை அளிக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : இந்தப் பள்ளியில் அரிசன மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா? அப்படியானல் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புகார் வந்திருந்தால் நிச்சயம் சொல்லியிருப்பேன். மூடி மறைக்கவில்லை, என்னிடம் அப்படி தகவல் ஒன்றுமில்லை என்றுதான் சொன்னேன்.

அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்குக் கல்விச் சலுகை

*304 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்கு கல்விக்காகக் கொடுக்கப்படும் சலுகைகள் விபரம் என்ன?

(இ) அரசியல் தியாகிகளின் குழந்தைகளிடமிருந்து படிப்புக்கு ஸ்காலர்ஷிப் கோரி 1964-65, 1965-66-ல் வந்த மனுக்கள் எத்தனை?

(உ) எத்தனை பேருக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டது?

(எ) பாக்கியுள்ள மனுக்களுக்கு வழங்காத காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவரத்திலிருந்து சென்ற ஆண்டு வரை இந்தக் கல்விச் சலுகைகள் வழங்கப்பட்ட விவரத்தைப் பார்க்கிற பொழுது, ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் மாணவர்களுக்குத் தகுதி இருந்தால் கூட, ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்ற விவரம் தெரியவருகிறது. சென்ற ஆண்டு இந்த நிலை இருந்தால் கூட இந்த ஆண்டிலிருந்தாவது தகுதி உள்ள எல்லா மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்குக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டுதோறும் இதற்கென்று குறிப்பிட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இது போதாது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது, மேலும் நிதி ஒதுக்குகிறர்கள்.

---

[a] Appendix I on pages 93–97 infra.